DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 104/2017 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **ஜாகீர்உசேன்** |
| Father's Name | : | **முத்து முகம்மது** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது இளையான்குடியில் குடியிருந்து வருகிறேன். சென்னையில் செல்போன் வியாபாரம் செய்து வருகிறேன். காயம்பட்ட அ.சா.1 சையது முகம்மது என்பவரை எனக்கு தெரியும். அவர் எனக்கு சகளை ஆவார். எதிரி அகம்மது காசிம் என்ற பீடா காசிம் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நானும் எனது சகளை சையது முகம்மது என்பவரும் வண்டியில் பெட்ரோல் போடுவதற்காக பரமக்குடி போகும் ரோட்டில் வளைவில் காலை சுமார் 12.00 மணியளவில் சென்றபோது சுமார் 4, 5 நபர்கள் வந்து என்னையும் எனது சகளை

அ.சா.1 சையது முகம்மது என்பவரையும் தாக்கினார்கள். நான் கீழே விழுந்ததில் நாடியில் காயம் ஏற்பட்டது.

2. எனது சகளை அ.சா.1 சையது முகம்மது என்பவருக்கு காயம் ஏற்பட்டது. எங்களை தாக்கிய 5, 6 நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அவர்களில் எதிரி அகம்மது காசிம் என்ற பீடா காசிம் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. நானும் எனது சகளையும் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இளையான்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 24.05.2008 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் நானும் அ.சா.1 சையது முகம்மது என்பவரும் நஜீமுதின் பெட்ரோல் பங்க் அருகே வந்துகொண்டிருந்தபோது எதிரிகள் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையின் முன்விரோம் காரணமாக என்னையும் எனது சகளை அ.சா.1 சையது முகம்மது என்பவரையும் பாட்டிலாலும், செங்கற்களாலும் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் அ.சா.1 அ.சா.1 சையது முகம்மது என்பவரிடம் இருந்த ரூ.5000/- மதிப்புள்ள செல்போனையும் பறித்து கொண்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். தற்போது நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால்

சரிதான். எதிரிகளை வழக்கிலிருந்த காப்பாற்ற அவர்களுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.23 10:49:52 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**